BTA
BERGEN TAMILSK AVIS
# தேன்தமிழிதழ்

Bergen Tamilsk Avis,
Krohnegården 5b,
5146 Fyllingsdalen,
Norway.
Org.nr: 926 840 320 - ISSN 2703-8440



படம்: யூலியஸ் அன்ரனி

Bergen Tamilsk Avis - no.19 - August 2022 - தேன் தமிழிதழ் - மாத இதழ் - இல.19 ஆவணி - 2022

*வணக்கம்!*

*கடந்த காலங்களில் நோர்வேயில் அதிக அளவிலான வெளிநாட்டவர்கள் தஞ்சம் புகுந்து அகதி அந்தஸ்து கோரி வருகின்றனர். ஆபிரிக்க நாடுகள் மற்றும் உக்ரைன் போன்ற யுத்தம் நடைபெறும் நாடுகளிலிருந்தும் பாதிக்கப்பட்ட மக்கள் அதிகளவில் நோர்வேக்கும் குடிபுகுந்து வருகின்றனர். இன, மத, நிற பேதமின்றி நோர்வே அரசு உலகின் பலபாகங்களில் இருந்தும் வந்திறங்கும் மக்களுக்கு உதவிக்கரம் நீட்டி வருகின்றது. போதிய சலுகைகளைக் கொடுத்து வருகிறார்கள். இந்த நாட்டில் பிறந்து வளரும் வெளிநாட்டவர்களின் பிள்ளைகளையும் தமது நாட்டின் குழந்தைகளாக பதிவு செய்து அனைத்து நலன்களையும் வழங்கி, அக்குழந்தை சிறந்த பிரசையாக வளர வைக்கிறார்கள்.*

*இருப்பினும் வெளி நாட்டவர்களும், அவர்களது அடுத்த சந்ததியினரும் இந்த நாட்டில் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள் என்பது மறைக்கப்பட்டுவரும் உண்மையாகும்.*

*எவ்வளவுதான் இந்த நாட்டுடன் இசைவாக்கம் அடைந்து வாழ்ந்தாலும், மக்களுடன் ஒருங்கிணைந்து வாழ்ந்தாலும், கல்வியில் சிறந்து விளக்கினாலும் வெளிநாட்டவர்களும், அவர்களது பிள்ளைகளும் பல வழிகளிலும் பாகுபாடு, பாரபட்சத்தினை அனுபவித்து வருகிறார்கள்.*

*அரச மற்றும் நகரசபைகள் தவிர்ந்த தனியார் வேலைத்தளங்களில் இந்நாட்டவர்களுக்கும், வெளிநாட்டவர்களுக்கு இடையில் பாகுபாடுகள், பாரபட்சம் இருப்பதை காணமுடிகிறது.*

*அண்மையில் IMDI (ஒருங்கிணைப்பு மற்றும் பன்முகத்தன்மை நிறுவனம்) மேற்கொண்ட ஆய்வில் கடந்த ஆண்டில் 50 விழுக்காடு புலம்பெயர்ந்த மக்கள் நோர்வேயில் பாகுபாடுகளை அனுபவிப்பதாக தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக வீடு வாங்க சென்ற இடங்களில் வெளிநாட்டவர் என்ற காரணத்தால் பலருக்கு வீடுகள் விற்க மறுத்துள்ளனர். அதேபோல் போதிய தகைமைகள் இருந்தும் பல இடங்களில் வேலைகள் மறுக்கப்பட்டுள்ளது. சோமாலிய மக்களே இங்கு அதிகம் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என கணக்கெடுப்பு அறிக்கை கூறுகிறது.*

*அம்மக்கள் துணிச்சலோடு தமக்கு இழைக்கப்படும் அநீதிகளை ஆய்வவுக் கூடங்களுக்கும், அரசியல் வாதிகளுக்கும் எடுத்துக்கூற வல்லவர்கள். இந்நாட்டில் தமிழர்களும் அதிகம் வாழ்ந்து வருகிறோம். எமது மக்களுள் பலரும் இவ்வாறான பாகுபாடுகளை அனுபவித்திருக்கலாம்.*

*ஆனால் அவர்கள் அதனை வெளிப்படுத்துவது மிகவும் அரிதே. எவ்வாறாயினும் புலத்தைப் பெயர்ந்து அந்நிய நாட்டுக்கு வந்துவிட்டால் நாம் இவ்வாறான மன உளைச்சல்களுக்கும், சவால்களுக்கும் முகம் கொடுத்தேயாக வேண்டும்.*

*Ansvarlig redaktør: Julius Antoni*
*ஆசிரியர்: யூலியஸ் அன்ரனி - தொலைபேசி எண்: (47) 924 63 674*

## ஆசிரியர்கள் வேலைநிறுத்தம்

நோர்வேயில் ஆசிரியர்கள் வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளனர்.

நோர்வேயில் பல நாட்களாக ஆசிரியர்கள் தமது பணியை பகிஷ்கரித்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.


ஓகஸ்ட் 31 புதன்கிழமை முதல் இன்னும்பல ஆசிரியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுகின்றனர்.

தொடர்ந்து ஆறு ஆண்டுகளாக ஏனைய நகரசபை மற்றும் அரச பணியாளர்களுக்கு கொடுக்கப்படும் சம்பள உயர்வு ஆசிரியர்களான எமக்கு கொடுக்கப்படவில்லை.

ஆசிரியராகப் பணியாற்றிவரும் ஐந்தில் ஒருவர் ஆசிரிய கல்வியை பெறாதவராக உள்ளனர். இவர்கள் தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் இல்லை. இந்த நிலை மாணவர்களை மிகவும் பாதிக்கும். ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் அவர்களது நெருக்கடிகளை இங்கு கருத்தில்கொள்வதில்லை. எமது நீண்டகால ஆசிரியக் கல்வியும், பரந்த பணிகளும் மதிக்கப்படவும், தகுதிவாய்ந்த புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படவும் இப்போராட்டம் நடைபெறுகிறது.

கொரோனா தொற்று காலத்திலும் எமது மாணவர்கள் தமது கல்வியினை இழந்தனர். தொடர்ச்சியாக தற்போது ஆசிரியர்கள் பணி நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளமையும் மாணவர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்றப்படுத்தியுள்ளது.

ஆசிரியர்களின் கோரிக்கைகளுக்கு விரைவில் தீர்வு கிடைத்து மீண்டும் பாடசாலைகள் வழமைக்குத் திரும்பும் என நம்புகின்றோம்.







## Hvordan går det med integreringen?

நோர்வேயில் புலம்பெயர்ந்த மக்களின் ஒருங்கிணைவு எப்படி நடக்கிறது? இணைந்து வாழ்தல் வெற்றிகரமாக அமைந்துள்ளதா? என்ற ஆய்வுத் தகவல்களினை IMDI நிறுவனம் தயாரித்து, கடந்த ஓகஸ்ட் 30ம் நாளன்று கருத்தரங்கினை நடாத்தி வெளியிட்டுள்ளது.

புலம்பெயர்ந்தோர் எண்ணிக்கை அதிகரித்து வரும் இவ்வேளையில், சமூகம் ஒருங்கிணைப்பில் வெற்றி பெறுவது மிகவும் முக்கியமானது. எனவே IMDI இவ்விடயம் தொடர்பாக வருடாவருடம் கருத்தரங்குகளை நடாத்துவது குறிப்பிடத்தக்கது. மக்கள்தொகை/புள்ளிவிபரங்கள், கல்வி மற்றும் தகுதிகள், வேலை மற்றும் நிதிநிலைமை, தினசரி ஒருங்கிணைப்பு, சுதந்திரமான வாழ்க்கை வாழ்வதற்கான உரிமை போன்ற முக்கிய விடயங்களை IMDI அமைப்பு அறிக்கையில் அடக்கியுள்ளனர்.

# முகமட்'இன் மூன்று குறிப்புகள்

**MOHAMED ALI YASEER ARAFATH**



## குறிப்பு:1

மூன்றாம் மண்டல நாடுகளில் உள்ள அரசியல் வாதிகள் மிகவும் ஊழல்மிக்கவர்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால் ஒரு போதும் இவர்கள் செய்த ஊழலுக்கு தண்டனை கிடைத்த வரலாறு இல்லை. இது குறித்து குற்றச்சாட்டுகள் மிகவும் பரவலாக இருந்த போதும் வெறும் ஆதாரங்கள் அற்ற வாய்ப்பேச்சு அளவுக்கே இவை இருக்கின்றன. இதற்கு முக்கிய காரணம் இந்த ஊழல் சட்டத்தின் கீழ் இருக்கும் லூப் ஹோல்களை பாவித்து மிகவும் சூட்சுமமான முறையில் செய்யப்படுவதே. எந்த அரசியல்வாதியும் தங்கள் வீட்டிலோ வங்கி கணக்கிலோ வைத்திருப்பதில்லை. ஊழல் பணம் வட்டிக்கு விடப்படும் வங்கியையே defacto வாக வைத்து அதன் மூலம் பல்லாயிரக்கணக்கான பினாமி-கள் வர்த்தகர்களை இந்த வலையமைப்பில் வைத்து இருப்பார்கள்.




வெளியே பார்க்கும் போது நியாயமான வியாபார நிறுவனங்களாகத் தோன்றும் பல நிறுவனங்கள் ஊழல் பணத்தை வைத்து இயங்கும் பினாமிகளுக்கே சொந்தமான இவ்வாறான நிறுவனங்கள் உள்நாட்டிலும் குறிப்பாக வெளிநாட்டிலும் ஆயிரக் கணக்கில் இருக்கும். உலகில் மிகவும் வறிய நாடான புருண்டியின் அரசியல்வாதி தனது பினாமிகள் ஊடாக லண்டனில் பெட்ரோல் செட்டும் நியூயார்க் மண்ஹட்டனில் சூப்பர் மார்க்கெடும் வைத்து அதில் வருமானம் ஈட்டி தனது சிடி பேங் அக்கௌன்டில் மில்லியன் டொலர்களை வைத்திருப்பான் ஆனால் புருண்டியின் சட்டத்தால் அவனின் பிடரிமயிரை பிடித்து பார்க்க கூட முடியாது.

இவ்வாறு சட்டம் பயின்ற கைக்கூலிகள் மற்றும் வியாபார விபச்சாரிகள் மூலமாக பல பில்லியன் டொலர்களை இழந்து மக்கள் அடிப்படை வசதிகள் கூட இன்றி வாழ்கின்றனர். மருத்துவ வசதிகள் இல்லாமல் ஆயிரக்கணக்கான குழந்தைகள் இறக்கின்றன. பல்லாயிரக்கணக்கான குழந்தைகளுக்கு கல்வி மறுக்கப்படுகின்றது. முன்றாம் மண்டல நாடுகள் அதே படுகுழியில் இருந்து கடைசிவரை மீளப் போவது இல்லை.

மக்களின் வயிற்றில் அடித்து சம்பாதிக்கும் பணத்தை வைத்து வியாபாரம் செய்யும் பினாமிகள் அனைவருக்கும் கேடு தான்.
இம்மையில் இவர்கள் வாழலாம் ஆனால் மறுமையில் இறைவனின் பிடி மிகவும் பலமானதாக இருக்கும்.

## குறிப்பு:2



தற்போதைய நிலையில் இலங்கை மக்களின் பொதுப் புத்தி அரசியல் வாதிகள், தொழிற்சங்கங்கள், அரசு பணியாளர், வர்த்தக சமூகம், ஊடகங்கள் உட்பட அனைத்து வகையான சமூக இயக்கவியல் சார்ந்த பொறிமுறைகளுக்கும் எதிரானதாகவே இருக்கிறது. ஆட்டோ டிரைவர்கள், பஸ் சிப்பந்திகள், பாதுகாப்புத்துறை போன்றவர்கள் மீது மக்கள் கடும் விசனமான நிலையில் இருக்கிறார்கள்.

அண்மையில் சகட்டு மேனிக்கு விலை அதிகரிப்பு செய்த பிஸ்கட் கம்பெனிகள் மக்களிடம் வந்து பிஸ்கட் வாங்குங்கள் என்று கெஞ்சும் அளவுக்கு மக்கள் ஒரு வகையான பாடத்தை போதிக்கிறார்கள்.
சில வாரங்களுக்கு முன்பு ஹயர் வராத ஆட்டோக்காரர்கள் தற்போதைய பழைய மாதிரி துரத்தி துரத்தி ஹயர் கேட்கும் மாமூல் கலாச்சாரத்திற்கு வந்து விட்டார்கள்.

இந்த நிலையில் சில தொழிற்சங்கங்கள் பொருளாதார மறுசீரமைப்பு மிகவும் அத்தியாவசியமான மற்றும் பிழைப்பு தேவையாக மாறியிருக்கும் இந்த நிலையில் மறுபடியும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபாடு உத்தேசமாக இருக்கும் நிலையில் மக்களின் விசனத்துக்கு ஆளாகி வருகின்றனர். அரசியல் வாதிகள் குறிப்பாக அதிகார குவிமையத்தை தங்களுக்குள் வைத்திருந்த ராஜபக்க்ஷ குடும்பத்தினருக்கு எதிரான மனநிலையில் மக்கள் இருந்தபோது அதற்கு எதிரான அனைவரையும் மக்கள் பொதுப் புத்தி ஏற்றிருந்ததை தவறாக எடை போடுதல் போல மடத்தனம் எதுவுமில்லை. சரத் பொன்சேகா போராட்டம் பொய்த்துப் போய் காமடியாகி முடிந்தது இதனால்தான். இதேபோல் இப்போது யார் தொழிற்சங்க நடவடிக்கைகளில் இறங்கினாலும் கடுமையான மக்கள் எதிர்ப்பை சந்திப்பது திண்ணம்.

அரசியல் சாணக்கியம் மிக்க ரணில் விக்கிரமசிங்க இதை வைத்து அழகான முறையில் காய் நகர்த்துவதில் கைதேர்ந்தவர். தனியாக பாராளுமன்றம் லேட்டாகி வந்து மூன்றில் இரண்டு பலம் பொருந்திய ஜனாதிபதிக்கு பதிலீடாக வருவது எல்லாம் ஹொலிவூட் படத்தின் திரைக்கதைக்கு இணையான சாகசம். இது தனிமனிதனாக செய்வதற்கு வாய்ப்பில்லை ரணில் விக்கிரமசிங்கவிற்கு பின்னால் உள்ள நிகழ்ச்சி நிரல் மிகவும் பலம் வாய்ந்தது. அதை உடைப்பது மிகவும் கடினமான விடயம். இந்த பின்னணியில் தொழிற்சங்க மற்றும் அரச பணியாளர் சம்பந்தமாக ரணில் விக்கிரமசிங்க அண்மைய கருத்துரைகள் முக்கியமானவை. எனவே ரணிலும் அவருக்கு பின்னால் இருக்கும் பலமான கரங்களும் நாட்டுக்கு ஏதோ வகையில் நன்மை செய்ய வேண்டும் என்று பிராத்தனை செய்வதை தவிர்த்து வேறு வழியில்லை.

## குறிப்பு:3




கொரோனா காரணமாக பாரிய அளவில் பாதிப்பை சந்தித்த துறைகளில் விமானம் மட்டும் உல்லாச கப்பல்துறை என்பன குறிப்பிடத்தக்கவை. உலகின் பெரிய பயணிகள் விமானமான Airbus A380 மற்றும் Cruise கப்பல்கள் ஏறத்தாழ மரண அடியை சந்தித்துள்ளன. ஏயார்பஸ் நிறுவனம் A380 விமானங்கள் உற்பத்தி செய்வதை நிரந்தரமாக நிறுத்தியுள்ளது.

A380 விமானங்கள் மனிதனின் உச்ச தொழில்நுட்ப விஞ்ஞான உருவாக்கம்.
A380 விமானங்கள் உருவாகும் போது 138000+ பேடன்ட் (Patent) பெறப்பட்ட விஞ்ஞான கண்டுபிடிப்புகள் உபயோகிக்கப்பட்டு உருவாகும் உலகின் மிகவும் பாதுகாப்பான ஊர்தி இதுதான்.இரண்டு அடுக்குகள் கொண்ட விமானத்தில் உச்ச அளவில் 850 பயணிகள் 8000 மைல்கள் பயணிக்காலாம்.

உலகில் மொத்தம் 240 A380 இராட்சத விமானங்கள் உண்டு இதிலே எமிரேட்ஸ் 123 A380 விமானங்களை இயக்குகிறது. பிரான்ஸ் Toulouse நகரத்தினை தாய் வீடாக கொண்டு இயங்கும் இந்த விமானம் அநேகமான விமான சேவைகள் ஓய்வு கொடுத்து தாய் வீட்டுக்கு அனுப்பி வருகின்றனர். தற்போதைய சூழ்நிலையில் Qatar airways மற்றும் நுஅசையவநள மட்டுமே A380 விமானங்களை தொடர்ச்சியாக இயக்கும் நீண்ட கால திட்டங்களை வைத்திருக்கின்றனர்.

அது போல அநேகமான Cruise Ships நிறுவனங்கள் பாரிய நட்டத்தில் இயங்கி வருகின்றன. பல கப்பல்கள் உடைக்கப்படவுள்ளன உலகின் மிகப்பெரிய குரூஸ் கப்பல் Global Dream 2 சேவையை ஆரம்பிக்கும் முன்பே உடைக்கப்படவுள்ள செய்தி மிகவும் கவலைக்குரிய விடயமாகும். இலங்கை ஹம்பாந்தோட்டையில் ஸ்டார் குரூஸ் கப்பல்கள் இரண்டு உடைக்கமுன் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. பயணிகள் கப்பல்கள் இந்த பிரச்சனைக்கு உள்ளாகி வருகின்றன. ஆனால் சரக்கு கப்பல் கட்டுதல் ஏறுமுகத்தில் போகும் வணிகம் சீனா மற்றும் தென் கொரியா இந்த துறையில் உலக ஜாம்பவான்கள். இந்தியா கொச்சியை பாரிய கப்பல் கட்டுதல் தொழில் மையமாக வளர்த்து வருகின்றது.

கப்பல் கட்டுதல் கப்பல் உடைத்தல் கப்பல் பதிவு செய்தல் பல பில்லியன் டொலர்கள் பெறுமதியான துறை இலங்கையில் தேசிய கொள்கையாக இவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஹம்பாந்தோட்டையில் கப்பல் சார்ந்த பாரிய கைத்தொழில் வலயங்களை உருவாக்க வேண்டும்.
ஏனெனில் இதற்கு உலகில் உள்ள மிகவும் சிறந்த பாதுகாப்பு அமைவிடம் ஹம்பாந்தோட்டை. இலங்கையில் உள்ள வணிக சட்டங்கள் இதற்கு ஏற்ற வகையில் மாற்றம் பெற வேண்டும். □

# உயிரோடு உறவாடு

**வாசகர் உடல் - உள நலம் சம்பந்தமான கேள்விகளும், மருத்துவரின் பதில்களும்**

Dr.விமலநாதன் MD PhD
(Senior Consultant Cardiologist,
Oslo, Norway)



*நான் allergi காரணமாக எனது வைத்தியரிடம் சென்றேன். அவர் இரத்தப் பரிசோதனை செய்து விட்டு எனக்கு நீரிழிவு நோய் இருப்பதாகவும், அது ஆரம்ப கட்டத்தில் இருப்பதாகவும் தெரிவித்தார். நீரிழிவு நோய் என்றால் என்ன?*

உங்களது வைத்தியரை முதலில் பாராட்ட வேண்டும். அவர் ஒவ்வாமையை கண்டுபிடிப்பதற்கான பரிசோதனையை மட்டும் எடுக்காமல் பொதுவான இரத்தப் பரிசோதனையும் செய்து பார்த்தபடியால் தான் இது தெரிய வந்தது.

இனி நீரழிவு நோய் என்றால் என்னவென பார்ப்போம்:
நாம் உட்கொள்ளும் மாப்பொருள் மற்றும் வெல்லம் நிரம்பிய உணவுப் பதார்த்தங்கள் அனைத்தும் குளுக்கோசாக உடலிலே மாற்றப்பட்ட பின்பே உடலுக்கு தேவையான சக்தியை வழங்கக்கூடிய எரிபொருளாகப் பயன்படுகின்றது. குளுக்கோசை உடற்கலங்கள் உள்வாங்கும் செயலை ஏது செய்வதும், மேலதிக குளுக்கோசை சேமிப்பாக வைக்க உதவுவதும் சதையி (கணையம்) என்ற சுரப்பியினால் சுரக்கப்படும் இன்சுலின் என்ற ஓமோனாகும். உடலில் இன்சுலினின் அளவு குறைவடைந்தாலோ அல்லது குருதியிலுள்ள இன்சுலினை உடற்கலங்கள் உணர்ந்து கொள்ள முடியாமலிருந்தாலோ குருதியில் குளுக்கோசின் அளவு அதிகரிக்கும். இதனால் அளவுக்கதிகமான குளுக்கோசு குருதிச் சுற்றோட்டத்தில் கலப்பதால் உடற் கலங்களுக்கு மிக அதிகமான குளுக்கோசு எடுத்துச் செல்லப்படுகின்றது. நீண்டகாலம் இது தொடரும் போது உடற்கலங்களுக்கு இது பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இதனால் மூளை, இதயம், சிறுநீரகம், கண்கள் போன்ற உறுப்புக்கள் மீளமுடியாத பாதிப்புக்குள்ளாகி நிரந்தரமாக சேதமடையும் அபாயமுள்ளது.
இதையே நீரழிவு நோய் என அழைப்பர். இந்நோய் உடனடியாக எந்த அறிகுறியையோ, உபாதைகளையோ ஏற்படுத்தாததால் பலர் அலட்சியமாக இருப்பது வழமை. ஆனால் உடலுறுப்புகளில் பாதிப்பை ஏற்படுத்தத் தொடங்கிவிட்டால் நோய் கணிசமானளவு தீவிரமடைந்துவிட்டது என்பதே உண்மை.

*இதனை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதுக்கு நான் என்ன செய்ய வேண்டும்?*

1. உணவில் மாப்பொருள் மற்றும் வெல்லத்தின் அளவைக் குறைக்க வேண்டும்.
2. நார்ச்சத்து நிறைந்த தானிய வகைகளிலிருந்து மாச்சத்தை பெற்றுக் கொள்ள வேண்டும்.
3. நிறையுணவை உட்கொள்ளவேண்டும்.
4. நேரந்தவறாமல் சாப்பிடும் அதேவேளை ஒரே முறையில் அதிகளவு சாப்பிடக்கூடாது.
5. ஒரு நாளில் சிறிது சிறிதாக பலமுறை சாப்பிடுவதால் குளுக்கோசினளவு திடீரென கூடுவதைத் தவிர்த்துக்கொள்ளலாம்.
6. கிரமமான உடற்பயிற்சி செய்வதன் மூலம் இன்சுலினின் தொழிற்பாட்டை அதிகரிக்கச் செய்யலாம்.
7. வீட்டில் குளுக்கோசின் அளவை பரிசோதிக்க பழகிக் கொண்டால் அதற்கேற்றவாறு நாளாந்த உணவுப் பழக்கத்தையும், உடற்பயிற்சியையும் சீரமைக்க இலகுவாக இருக்கும்.

*எவ்வாறான மருந்துகளை நான் எடுக்க வேண்டும்?*

1. ஆரம்ப நிலைகளில் மருந்துகளின்றி மேற்கூறியுள்ள விடயங்களை சிரத்தையுடன் கடைப்பிடிப்பதன் மூலம் கட்டப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும். வீட்டில் குளுக்கோசை அளவிடுவதோடு வைத்தியரிடமும் வருடத்தில் 3, 4 தடவைகள் சென்று குளுக்கோசின் அளவு மட்டுமன்றி குருதியமுக்கம், கொலஸ்தரோல் என்பவற்றையும் பரிசோதித்து கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும்.
2. இன்சுலின் உடம்பில் போதியளவு இருந்து உடற்கலங்கள் அதை பாவிக்க முடியாதிருந்தால் குளிசைகள் மூலம் உடற்கலங்கள் இன்சுலினை பாவிக்க தூண்ட வேண்டும்.
3. உடலில் இன்சுலினினளவு குறைவாக இருப்பின் ஊசிமூலம் இன்சுலினை எடுத்துக் கொள்ள வேண்டும். எனவே, சிகிச்சைமுறை ஆளுக்காள் வேறுபடும். □

# முடிந்த வாழ்வின் பிரதி

## "போக்காளி"




வெளியீடு:
கருப்புப் பிரதிகள்
பி-55, பி.எம்.தர்கா
லாயிட்ஸ் சாலை,
திருவல்லிக்கேணி,
சென்னை-05.
பேச: 9444272500
மின்னஞ்சல்:
karuppupradhigal@gmail.com

நாவல் பற்றிய சிறு குறிப்பு

-சஞ்சயன் செல்வமாணிக்கம்-
(Oslo,Norway)

*தேவகாந்தனின் கனவுச் சிறை, கலிங்கு ஆகியன ஈழப்போராட்ட வாழ்வியலை பிசைந்துப் புனைந்த அதி சிறந்த நாவல்கள். ஈழத்து நாவல்களில் தேவகாந்தனின் கனவுச்சிறையை பேசாது கடந்துவிடவே முடியாது. அத்தனை அற்புதமானது அது.*

*இன்று, நோர்வே வாழ் கேதீஸ் (நவமகன்)* Ketheeswaran Nava Manon *எழுதிய "போக்காளி" வாசித்து முடித்தேன். எனது 35வருட நோர்வே வாழ்வினை எது வித பாசாங்கும், வடிகட்டலுமின்றி மீள உணரமுடிந்தது. நாவலை வாசிக்கும் அனைவரும் அதையே உணர்வர்.*

*கேதீசின் படைப்பை நாவல் என்று குறுக்கிக்கொள்வது இந்த வரலாற்றாவணத்தினை நாம் அவமதிப்பதற்குச் சமம். அத்தனை நுணுக்கமான அவதானிப்புடன் நோர்வேயில் தமிழர்களின் வாழ்வையும் ஈழப்போராட்டத்தையும் பிசைந்து எழுதியிருக்கிறார். அவர் மறந்துவிட்ட சம்பவங்கள் என்று சொல்வதற்கு அதிகம் இல்லை.*

*ஈழப் போராட்டத்தின் முக்கியச் சம்பவங்களை அதே காலக் கிரமத்தில் நாவலின் சம்பவங்களாகக் கோர்த்திருப்பது கடந்துவிட்ட வாழ்வின் வெற்றிகளையும் வலிகளையும் நெருக்கமாக மீளவும் உணரவைக்கிறது. உரையாடல்கள் சிலருக்கு ஒவ்வாமையைத் தரலாம். வரலாற்றை எழுதுபவன் பொய் எழுத முடியாதல்லவா?*

*நான் இதுவரை கணினியில் அல்லது தொலைபேசியில் 15 -20 பக்கக் கதைகளையேனும் படித்ததே இல்லை. ஆனால் கடந்த நான்கு நாட்களாகப் "போக்காளி" தன் 655 பக்கங்களை வாசிக்க வைத்திருக்கிறான். விமர்சனம் என்று எழுதினால் பல பக்கங்கள் என்றாகிவிடும். அத்தனை விடயங்கள் இருக்கின்றன பேசுவதற்கு. எனவே தவிர்க்கிறேன்.*

*ஈழத் தமிழர்களின் வாழ்வியல் ஆவணம் என்ற ரீதியில், இந்த நாவல் நோர்வேஜிய மொழிக்கு மிக அவசியமாக மொழிபெயர்க்கப்பட வேண்டும்.*

*ஒரு இனக்குழுவினது குடிவரவாளர்களின் வாழ்வினை இத்தனை நுணுக்கமான விபரிப்புக்களுடன், இதுவரை நோர்வே மொழியில் எவரும் எழுதவில்லை என்றே நினைக்கிறேன். முக்கியமாக ஈழத்தமிழர்களிடத்திலிருந்து நோர்வேஜிய மொழிக்கு இப்படியான ஒரு எழுத்தும் இதுவரை கிடைக்கவில்லை என்பதை நிட்சயமாகச் சொல்லாம்.*

*இன்னும் 20 - 25 வருடங்களின் பின் என் சந்ததி முடிந்துவிட்டபின்பு, நோர்வேயில் ஈழத் தமிழர்களது ஆரம்ப காலத்து வாழ்வினை ஆய்வுசெய்பவர்களுக்கு அத்தனை விபரங்கள் கொட்டிக்கிடக்கின்றன போக்காளியில்.*

*நாம் புலம்பெயர்ந்து வாழும் தேசங்களில் எல்லாம் இப்படியான அந்த அந்த நாட்டில் ஈழத்தமிழர்கள் குடியேறிய வரலாற்றைப் பதிவுசெய்யும் எழுத்துக்கள் தோன்ற வேண்டும். எம்மையல்லால் வேறு யாராலும் அவற்றை எழுதமுடியாதல்லவா?*
*புலம் பெயரிகள் தவறவிடக்கூடாத நாவல். புலம் பெயர் வாழ்க்கையை அறிய விரும்புபவர்களும்தான்.*

*கேதீசை எவ்வாறு பாராட்டலாம் என்பதற்குச் சொற்களைத் தேடிக்கொண்டிருக்கிறேன்.*
*பெரும் பணி செய்திருக்கிறீர்கள் கேதீஸ்.*
*வாழ்த்துக்கள்.* □

# பாசி வளர்ப்பு:

## உயிரியல் ஊடுருவல் இதன் மிகப்பெரிய அபாயம்.

*-பேராசிரியர் வறீதையா கான்ஸ்தந்தின்-*



Kappaphycus alwarezii *என்கிற இந்த அயல்நாட்டுக் கடல் பாசி வளர்ப்பு 2005இல் இராமேஸ்வரம் பகுதியில் பெப்சி நிறுவனத்தால் அறிமுகமானது. தோழர் தமயந்தி குறிப்பிடுவது போலவே மீனவர்களுக்கு மாற்றுத்தொழிலாக முன்வைக்கப்பட்டது. பிறகு தமிழ் நாடு அரசால் தடை செய்யப்பட்டது.*
*நாட்டுப்பாசிகளில் இதே பொருட்கள் உள்ளன. உயிரியல் ஊடுருவல் இதன் மிகப்பெரிய அபாயம். நாட்டுப்பாசிகளையும் பவளப்பாறை இனங்களையும் அழித்துவிடும்.*
*பார்க்க: கடற்கரையைக் காவுகேட்கும் கப்பா.ஃ.பைகஸ்.*

*நூல்: அணியம். வறீதையா கான்ஸ்தந்தின். தமிழினி பதிப்பகம், சென்னை. 2009.*
*-பேராசிரியர் வறீதையா கான்ஸ்தந்தின்-*

*தொடர்ந்து வாசிக்க, தமயந்தியின் குறிப்பு.*
---------------------

*பன்னாட்டு நிறுவனமான "பெப்சி"யின் கடற்பாசி வளர்க்கும் திட்டம். இது மிகக் கேடான திட்டமாகும்.*
*கடலில் இயற்கையாக விளைந்து, கடல்வாழ் உயிரினங்களுக்கு பெரும் ஆதாரமாகத் திகழும் கடற்தாவரங்களை இந்த வளர்ப்புப் பாசி உற்பத்தியானது நிர்மூலமாக்கி விடும்.*
*இவர்களின் வளர்ப்புப் பாசியில் உருவாகும் ஒரு-வகை வெண்குஷ்டமானது இயற்கைத் தாவரங்களுக்குத் தொற்றுவதால் அவை அழுகி அழிந்து விடும்.*



*இந்தியாவின் பசுமைப் புரட்சியின் தந்தை எனச் சொல்லப்படும் எம்.எஸ்.சுவாமிநாதனின் செயற்கை விவசாயம் எப்படியெல்லாம் பாரம்பரிய விவசாயத்தை அழித்தது மட்டுமல்லாமல், விளைநிலங்களையும் நாசப் படுத்தியதோ அதேபோன்றதோர் நடவடிக்கைதான் இது.*
*கடற்பாசியில் இருந்து பெறப்படும், "ஏகார்" மற்றும் "அல்ஜினிக்" அமிலம் போன்ற காபோவைதிரேற் பதார்த்தங்கள் எடுக்கப்படுகிறது. இவ்விரு பதார்த்தங்களும் கடற்பாசியைத் தவிர, இதுவரை வேறு எந்தத் தாவரங்களிலிருந்தும் பெறமுடியாதுள்ளது.*
*கிடைத்தற்கரிய பதார்த்தங்களைத் தயாரிக்க உதவும். இவை, உலகமயமாதல் சந்தைக்கான பல மறைமுக வியாபாரத் தேவைகளை உள்ளடக்கிய பகற்கொள்ளைத் திட்டமாகும்.*

“ஏகார்” எனப்படுகின்ற பதார்த்தம் சென்னிறக் கடற்பாசியிலும், “அல்ஜினிக்” அமிலம் கபிலநிறப் பாசியிலும் இருந்து பெறப்படுகிறது.
ஏகாருக்கான “கஞ்சிப் பாசி” என்றழைக்கப்படும் செந்நிறக் கடற்பாசி, கொட்டியாற்றுக் குடாவிலும், மூதூரிலும் ஏராளமாகக் கிடைக்கிறது. இங்கு இவை வைகாசி முதல் ஐப்பசி வரையும் தாராளமாக வளர்ந்து வருகிறது. இதில் முதல்தரமான கஞ்சிப்பாசி புத்தளம், கல்பிட்டி, மன்னார், மண்டைதீவு, அனலைதீவு போன்ற பகுதிகளில் அதிகமாகக் காணப்படுகிறது. புத்தளத்தில் இது தைமாதம் முதல் வைகாசி வரையும் பெறவும் முடிகிறது.



உயர்ந்த வெப்பநிலையில் திரவமாகவும், தாழ்ந்த வெப்பநிலையில் திண்மமாகவும் இருக்கக்கூடிய ஒரு பதார்த்தமாக “ஏகார்” இருக்கிறது. இவை ஐஸ்கிரீம், மிட்டாய், ஜாம், புடிங், ஜெலி, யோக்கட் போன்ற பெரும் தயாரிப்புக்களில் தடிப்பாக்கியாகப் பயன்படுகிறது. இதைவிட மதுபான உற்பத்தியில் தெளிவாக்கியாகவும், கடதாசி உற்பத்தியில் பளபளப்பாக்கியாகவும் திரவநிலையிலும் பயன்பாடாகிறது. மருத்துவத்துறையில், வயிற்றை இளக்கிவிடும் மருந்துப் பதார்த்தமாகவும், பல் கட்டுதலுக்கான அச்சுச்செய்கையின் கலவையாகவும், நாம் உண்ணும் மாத்திரைகளில் மேலுறைகளாகவும் (கவசமாகவும்) இதுவே பயன்படுகிறது.

“அல்ஜினிக்” அமிலப் பதார்த்தத்தைக் கொண்ட கபிலநிறப் பாசிகள், அதிகளவில் பரம்பலடைந்து படர்கின்ற ஒரு பாசியினமாகும். இது புடவைக் கைத்தறி குடிசைத்தொழிலில் பருத்தித் துணி அச்சிடுவதற்கும், செயற்கை நார் தயாரிப்பில் தடிப்பாக்கியாகவும், “வார்னிஸ்” பூச்சுக்கள், மற்றும் ஒட்டும் - மினுக்கும் பதார்த்தமாவும் பாவிக்கப்பட்டும் வருகிறது. இந்த வியாபார உத்திகளின் பெரும் இலாபத்தை இலக்குவைத்தே இப் பன்நாட்டு நிறுவனங்களானவை (“பெப்சி”யும்) தமது முதலீட்டுச் செல்வாக்கில், இதைத் தொண்டாக்கி இயங்கி வருகிறது.

வேலைவாய்ப்பு என்ற பெயரில் கொள்ளை இலாபமடிக்க இவை நினைக்கின்றனவே ஒழிய, மக்களின் வறுமையைச் சீராகப் போக்கவோ, மக்களுக்கு புரத உணவை பெற்றுக் கொடுக்கிற நல்ல எண்ணங்களிலோ இவர்களுக்கு நாட்டம் கிடையாது. இப்பொழுது கடற்பாசியில் இருந்து “பயோ” எரி-பொருளை உருவாக்கலாம் என்பதைக் கண்டறிந்தபோதும் இவ்வுண்மையை மக்களுக்குச் சொல்லுவதும் கிடையாது. 50ஆம் ஆண்டிலிருந்து 60 மடங்கு பாசியுற்பத்தியை இத்தொண்டு நிறுவனங்களை வைத்தும் இவர்கள் சாதித்தும் உள்ளனர். கடற்பாசி உற்பத்தியானது ஆசிய, பசுபிக் கடல்களில் இருந்து 91 சதவீதம் கிடைக்கிறது. இது ஆண்டொன்றுக்கு 8 கோடி தொன்னாகவும் இருக்கிறது.

சமூக அரசியல் அக்கறை கொண்டவர்களும், சமூகத்தின் மீதான தார்மீகப் பொறுப்புள்ள ஊடகங்களும், சுற்றுச்சூழல், கடல்வளம் சார்ந்த அறிஞர்களும், புத்திஜீவிகளும் இத்தகைய மோசடித் திட்டங்களைச் சரியாக இனங்கண்டு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதனூடாகத்தான் இலங்கைத்தீவில் இந்தப் பாசிவளர்ப்புத் திட்டத்தை நிறுத்த முடியும்.

(இன்னும் சில பிற்குறிப்பு:- இலங்கை இந்திய மீனவர் பிரச்சனைகளுக்குத் தீர்வெதுவும் காணாமல் திசை திருப்பும் நடவடிக்கையாகவும் இதனை நான் பார்க்கிறேன். இந்திய இழுவைப்படகு முதலாளிகளுக்கு எமது கடலைத் தாரைவார்க்கும் திட்டம் இது என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.
வடக்கு மீனவர்களை மீன் பிடிப்பதை விட்டுவிட்டு பன்னாட்டு நிறுவனங்களின் பாசி வளர்ப்போராக மாற்றும் நடவடிக்கையல்லவா இது?

ஏற்கனவே வடக்கில் நிலவும் கடலுணவுப் பற்றாக்குறையை நீக்க ஏனைய ஆசிய நாடுகளிலிருந்து மாதாமாதம் பல்லாயிரம் டன் ரின்மீன் இறக்குமதி செய்யப் பட்டுக் கொண்டிருக்கின்றது. போசாக்குக் குறைவால் குழந்தைகளும், கற்பிணித் தாய்மாரும் படும் அவலங்களை வடக்கு வைத்தியர்களைக் கேட்டால் சொல்வார்கள். தவிரவும் 40வயதைத் தாண்டியவர்களுக்கு கல்சியம் பற்றாக்குறை பெருமளவில் தோன்றியுள்ளது.
எல்லாப் பக்கமும் அரசியல்வாதிகளும் பெருமுதலாளிகளும் தமது லாபத்தை நோக்காகக் கொண்டு மக்களை வஞ்சித்து வருகிறார்கள் என்பதற்கு இப்படி பல்லாயிரம் எடுத்துக்காட்டுக்கள் நடக்கின்றன.

-தமயந்தி-






திடீர் பயணம். எனக்கு அண்மையில் நாரியில் அறுவை சிகிச்சை செய்ததால் மிக நீண்ட தூரம் பயணிப்பது கடினம் என வைத்தியர்கள் எச்சரித்தனர். இருப்பினும் எனது சகோதரனுக்கு 70வயது பிறந்தநாள். அன்றைய நாளில் நான் அவருடன் நிற்க வேண்டும் என்ற ஆவலில் பயணிக்க முடிவு செய்தேன். நோர்வே, பேர்கன் நகரிலிருந்து சிறி லங்கா கொழும்பு விமானப்பயணம். பின்னர் தொடர்ச்சியாக தரைவழி யாழ்ப்பாணம் செல்லவேண்டும். என்னால் முடியுமென மிக உட்சாகமாக பயணிக்க ஆரம்பித்தேன்.

ஐரோப்பிய நாடுகளில் கோடைகால விடுமுறை என்பதாலும், கொரோனா கட்டுப்பாட்டு விதிகள் தளர்த்தப்பட்டமையாலும் விமான நிலையங்களில் எல்லாம் மக்கள் மிகவும் மகிழ்ச்சியாக நிறைந்து காணப்பட்டனர். அவர்களுள் ஒருவனாக நானும் மகிழ்வோடு எனது தாய்மண் நோக்கி பயணித்தேன். அதிகாலை நான்கு மணியளவில் கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தில் விமானம் தரையிறங்கியது. குடிவரவு பதிவினை முடித்துக்கொண்டு நிலையத்துக்கு வெளியே சென்றேன். எனது வரவுக்காக என் அன்புச்சகோதரி மிக ஆவலாகக் காத்துக் கொண்டிருந்தார். பல வருடங்களின் பின்னர் சந்திக்கிறேன். கட்டியணைத்து அன்பை பகிர்ந்து கொண்டு வாகனத்தில் ஏறினோம்.

பொதுவாக வாகன நெரிசல்களால் அல்லோலப்பட்டுக் கொண்டிருக்கும் பிரதான வீதிகளெல்லாம், வெறித்தோடிக் கிடந்தன. வாகனங்களின் Horn சத்தம் எதுவுமே இல்லை. ஒரு சில இடங்களில் மாட்டு வண்டில்களையும் காணக்கூடியதாக இருந்தது. கட்டுநாயக்காவில் இருந்து யாழ் மண் நோக்கி பயணிக்கிறோம். வீதியில் சில இடங்களில் நான்கு திசைகளிலும்.அனைத்து வகையான வாகனங்களும் தரித்து நின்றன. பல கிலோ மீட்டர் தொலைவு வரை, எல்லாத் திசைகளிலும் வாகனங்களின் வரிசைகள் நீண்டுகொண்டே சென்றது. தமது வாகனங்களுக்கு தேவையான எரிபொருட்களுக்காக காத்திருக்கின்றன. பலர் பல வாரங்களாக காத்துக்கிடக்கிறார்கள். தாங்க முடியாத வெய்யில் வெப்பத்தாலும், பசியாலும் பலர் மயங்கி விழுந்தனர். சிலர் இறந்தும் இருக்கின்றனர். சிறிலங்காவில் மிக மோசமான பொருளாதார நிலை, எரிபொருள் தட்டுப்பாடு என பல்வேறு செய்திகள் வந்தனதான் இருப்பினும் நேரடியாக பார்த்த போது உண்மையில் அதிர்ந்து போனேன்.

மக்களுக்கு தேவையான எரிபொருள் கிடைக்கா விட்டால், அது இத்தனை பாதிப்பை ஏற்படுத்துமா? என அதிர்ந்தேன். இந்த கேள்வியை எனது அக்காவிடம் போட்டேன். தம்பி நம்ம ஊருக்கு போனதும் உனக்கு விளங்கும். அங்கு யாரும் தொழிலுக்கு போறதில்லை. எல்லாப் படகுகளுக்கும் எரிபொருள் தேவை. பாடசாலை எல்லாம் மூடி விட்டனர். அவசரத்துக்கு ஆஸ்பத்திரிக்கே போக முடியாது உள்ளது. முடியுமானோர் சைக்கிளில் ஓடித் திரிகிறார்கள். அதுவும் 30 ஆயிரம் விற்றது 2 நாட்களுக்குள் ஒன்றரை இலட்சம் ரூபாவுக்கு விலை ஏறிவிட்டது என தொடர்ந்து கொண்டே போனார். அக்கா பதில் கூறி முடிப்பதுக்குள் புத்தளம் வந்துவிட்டது.
புத்தளத்தில் நின்று நாரி நிமிர்த்தி, காலை உணவும் சாப்பிட்டுவிட்டு பயணம் தொடர்ந்தது யாழ் மண் நோக்கி.



வவுனியா நகரில் கணேசபுரம் என்ற சிறு கிராமத்தில் உள்ள நல்லாயன் கன்னியர் மடத்தில் வாகனம் தரித்தது. இந்த மடத்தில் தான் எனது சகோதரி Sr.A.M.Fatima வும், அருட்சகோதரி Sr. Vinitha அவர்களும் பணிபுரிகிறார்கள்.
இம்மடத்தில் 25பெண்பிள்ளைகள் வசிக்கிறார்கள்.

*எல்லோரும் 16 - 25 வயதுக்குட்பட்ட பிள்ளைகள். யுத்தத்தில், இயற்கை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் பிறந்து வளர்ந்துவரும் அன்பான பிள்ளைகள். இவர்களுக்கு பல்வேறு கல்வி மற்றும் கைத்தொழில் வகுப்புக்கள் இம்மடத்தில் நடைபெறுகிறது.*

*எதிர்காலத்தில் இவர்கள் தமது சொந்த காலிலே நிற்பதற்கான தொழிற்கல்வி கற்பிப்பது மட்டுமல்லாது, இந்த சமூகத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் அனைத்துக்கும் முகம்கொடுத்து வாழ்ந்து வெற்றி கொள்ளுவதற்கான கல்வி முறைமையும் முறையான ஆசிரியர்களைக் கொண்டு இங்கு கொடுக்கப்படுகிறது. கல்வி மட்டுமல்ல வெளியரங்க, உள்ளரங்க விளையாட்டுக்களிலும் அவர்கள் ஈடுபடுவதனை நேரடியாகப் பார்த்தேன். மிகவும் பின்தங்கிய ஒரு சிறிய கிராமத்தில் நடைபெறுக் கொண்டிருக்கிறது. இவ்வாறான பிள்ளைகள் நமது நாட்டில் ஏராளமாக உள்ளார்கள்.*



*யுத்தம், சுனாமி போன்ற கொடிய அனர்த்தங்களின் பின்னர் நமது நாட்டில் இவ்வாறான தேவைகள் அதிகமாகி விட்டது. எனவே எமது மடங்களும் இவ்வாறான பாதிக்கப்பட்ட நம் சகோதரர்களுக்கு எம்மாலான பணிகளை ஆற்றி வருகின்றோம் என்று அருட்சகோதரிகள் புன்சிரிப்போடு கூறினார்கள். அவர்கள் முகங்களில் சிறிய சோகத்தையும், களைப்பையும் என்னால் காண முடிந்தது. அதற்குள்ளும் சிரிக்கிறார்களே என ஒருகணம் யோசித்தேன். "மிகச் சிறந்த பணி, தொடர்ந்து செய்யுங்கள் எமது ஆதரவு எப்போதும் இருக்கும்" எனக் கூறிக்கொண்டு யாழ் மண் நோக்கிய எனது பயணத்தை தொடர்ந்தேன். வழமைபோல் முருகண்டியில் ஒரு தேனீர் அருந்திவிட்டு, கச்சான் வாங்கிக் கொண்டு ஓடினோம். இரவு வேளையில் யாழ்மண்ணை சேர்ந்தேன். நான் யாழ்ப்பாணம் நாவாந்துறை என்னும் ஊரை சேர்ந்தவன். எங்கள் ஊர் சொந்தங்கள் உறவுகளால் சூழப்பட்டது. ஆனால் நான் போனபோது மக்கள் நடமாட்டமின்றி ஊர் வெறித்துக் கிடந்தது. எல்லோரும் மடுவுக்குப் போய் விட்டார்கள். நாடு முழுதும் பொருளாதார நெருக்கடி, வாகனங்களுக்கு எரிபொருட்கள் இல்லை. எப்படி எல்லோரும் போனார்கள் என்று நான் வியந்தேன். ஆனால் ஊரில் நின்றவர்களோ "அதெல்லாம் நம்மவர்கள் எப்படியாவது போய்விடுவார்கள்" என்று சிரித்தார்கள். இதில் வியப்பு ஒன்றுமில்லை. அன்றாடம் கறி வாங்க காசு இல்லாதவர்களும் எப்படியாவது மடுவுக்குப் போய் விடுவார்கள். இது எனக்கும் தெரியும்.*



*இதுவே காலம் காலமாய் நடக்கிற விடயம். அப்போ நான் மட்டும் எதற்கு ஊரில் நிற்க வேண்டும். எனது திட்டத்தில் மடு யாத்திரையும் உள்ளது. அடுத்தநாள் காலையிலேயே எனது அண்ணா, அக்காமார், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் எல்லோரும் மடுவுக்கு பயணித்தோம். மடு மன்னார் மாவட்டத்துள் அமைந்துள்ளது. கத்தோலிக்க மக்களின் பிரதான யாத்திரைதலம். நாட்டிலுள்ள தமிழ் மக்களும், சிங்கள மக்களும் இணைந்து அருகருகே விடுதி கட்டி ஒன்றாக வாழ்ந்து, இறைவழிபாடுகளில் பங்குகொண்டு திருவிழா கொண்டாடி மகிழும் முக்கிய தலம்.*

அறிவித்தல்களிலிருந்து திருப்பலி வரை இரு மொழிகளிலும் நடைபெறும். காணும் இடமெல்லாம் தமிழ், சிங்கள ஆயர்கள், குருக்கள், அருட்சகோதரிகள் வெள்ளை ஆடைகளுடன் நிறைந்து காணப்படுவார்கள். எமது மக்களும் தமது சகல கஷ்டங்கள், கவலைகள், நோய்கள் அனைத்தையும் மறந்து மிகவும் சந்தோசமாகத் தோன்றினர். எமது மக்கள் இடம்பெயர்ந்து வீடு வாசல்களை இழந்து அகதிகளாய் காடுகள் தாண்டி ஓடிய போது இந்த மடு மாதாவின் திருத்தலம்தான் ஆதரவு கொடுத்தது என்பதை என் சகோதரர்கள் நினைவுபடுத்தினர்.

வழிபாடுகள், மடுமாதாவின் ஆசீர் அனைத்திலும் பங்குகொண்டதோடு, தெரிந்த பல குருக்கள், அருட்சகோதரிகள் இன்னும் ஆயர்களுடனும் பேசும் வாய்ப்பு கிடைத்தது. எமது மன்னார் ஆயருடன் அன்பான சந்திப்பு, நீண்ட நேரம் உரையாடவும் சந்தர்ப்பம் கிடைத்தமை மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. இரண்டு நாட்கள் மடுவில் தங்கினோம். அங்கு நின்ற ஒவ்வொரு கணமும் மறைந்த எனது ஐயா, அம்மாவின் நினைவுகளே என்னை முற்றிலும் ஆட்கொண்டிருந்தது. சிறுவயதில் நாங்கள் குடும்பமாக வருடாவருடம் மடுவுக்கு போன நினைவுகள் என்னை மிகவும் வருடிக்கொண்டே இருந்தது. அதுவல்லோ எமது அழகியகாலம். அந்த நாட்கள் இனிமேல் வராது என்கிற யதார்த்த உண்மை என்னை மிகவும் கவலை கொள்ளவைத்தது. உண்மையை சொன்னால் பல தடவைகள் அங்கு என்னோடிருந்த சகோதரர்களுக்கு தெரியாது அழுதும் இருக்கிறேன். வேண்டாம் இப்போ அது பற்றி பேச வேண்டாம் எழுதுவதை நிறுத்திவிட்டு அழுது விடுவேன்.

மடுமாதாவிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு யாழ்ப்பாணம் சென்றோம்.
எப்போதும் வாகனங்களால் நிறைந்து காணப்பட்ட யாழ்ப்பாணம் வெறுமையாய் கிடந்தது.
ஆயினும் மக்கள் சைக்கிள்களிலும், கால் நடையாகவும் தமது அன்றாட பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.
CTB பஸ் வண்டிகள் மட்டுமே ஓடுவதைக் கண்டேன். யாழ் மண்ணின் பிரதான வழிபாட்டு தலமான நல்லூர் ஆலயத்தை தரிசித்து விட்டு, அதனது அழகையும் சிறப்பையும் எண்ணி ரசித்தபடி சுற்றிப் பார்த்தேன். வெளிநாட்டுக்கு வரும் முன்னர் நல்லூர் திருவிழாவுக்கு நானும் எனது நண்பர்களும் ஊரிலிருந்து நடந்து போய்வருவது நினைவுக்கு வந்தது.

யாழ் நகர சபை மேயரையும், அவரது அன்பு மனைவி, நண்பர் பார்த்திபனையும் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. நட்பு ரீதியான சந்திப்பு தான். ஆயினும் சிறிலங்கா, நோர்வே சமுக, அரசியல் கருத்துக்களும் சுதந்திரமாக பேசினோம். எமது நோர்வே வானொலி ஊடகத்தில் யாழ் மண்ணிலிருந்து ஊடகப்பணி புரிந்துவரும் ப்ரியாமதா பயஸ் அவர்களை நேரடியாக சந்தித்து எமது ஊடகம் தொடர்பான பல்வேறு ஆக்கப்பூவுர்வ விடயங்களை கலந்துரையாடினேன். வானொலியில் மட்டுமல்ல எமது தேன் தமிழிதழான நோர்வேயின் மாதாந்த இதழுக்கும் தொடர்ச்சியான ஆக்கங்களை துடிப்போடு தந்தவரும் ப்ரியாமதா பயஸ் உடனான சந்திப்பு மிகவும் காத்திரமானதே. போக்குவரத்து தடங்கல்களால் திட்டமிட்டு சென்ற பல ஊடகப் பதிவுகளை செய்ய முடியாது போனது இன்றும் என்னை வருத்துகிறது.

எனது சகோதரன் அருட்தந்தை A.M. ஸ்ரீபன் அடிகளாரின் 70 வயது யூலை 5ம் நாள்.
அன்றைய நாளில் நானும் அவருடன் கூடவே நிற்க வேண்டும் என்றே நாட்டுக்கு சென்றேன்.
அவர் அதிக காலம் எமது குடும்பத்தை பிரிந்து குருவாகி இந்தியாவிலும் இலங்கையிலும் இறைபணி ஆற்றியவர்.
தற்போது அவர் மிருசுவிலில் ஒரு ஆச்சிரமத்தில் பணியாற்றுகிறார்.
அங்கு நானும் அவருடன் 3 நாட்கள் ஆச்சிரமத்தில் தங்கினேன். மிக அமைதியான இடம்.
இறைவழிபாடுகள் மட்டுமல்ல, எம்மைப்பற்றி நாமே தியானிக்க சிறந்த ஓரிடம். ஓய்வில்லாது ஓடித்திருந்த என்னைப் போன்றவர்களுக்கு தேவையான இடம். அந்த ஆச்சிரமத்தில் ஏராளமான அழகுநிறை பூ மரங்களும், குரோட்டன்களும், சுவையான கனிதரும் மரங்களும் நிறைந்து நின்றன. நாய்கள், கோழிகள், முயல்கள், வாத்துக்கள், மயில்கள் என பலவகை பிராணிகள் அந்த நிலத்தில் சுதந்திரமாக திரிந்தன. அவற்றின் இயற்கை அழகும், அசைவுகளும், ஓசைகளும் எனது மனதுக்கு இதமாக-வே இருந்தன. எல்லாவற்றுக்கும் மேலாக அங்கிருந்த குருக்கள் என்னை மிகவும் அன்பாகவே கவனித்துக் கொண்டார்கள். இப்போ நான் மிருசுவிலில் இருந்து யாழ்ப்பாணம் செல்ல வேண்டும். CTB பஸ் மட்டுமே ஓடுகிறது.



வவுனியாவிலிருந்து யாழ் சென்ற பஸ் ஒன்றில் ஏறினேன். சனநெரிசல் மூச்சு முட்டியது. ஆண்கள் பெண்கள் என்ற வேறுபாடும் இல்லை. எனது கால்களுக்கு மேலும் ஒருவர் நின்றார். கோபப்படவே முடியாது. ஐயோ அம்மா என்று கத்தவும் முடியாது. கத்துவதானால் பஸ்ஸில் நின்ற எல்லோருமே கத்தவேண்டும். நகைசுவை நடிகர் வடிவேலு போல் முகபாவம் செய்யவும் முடியாது. நல்லதோர் அனுபவம். எமது மக்கள் அன்றாடம் அனுபவிக்கும் பயணமல்லவா. அதனை நினைத்தபடி யாழ்ப்பாண ரவுனில் இறங்கினேன்.



வீடு சென்றதும் எனது பெரியக்காவுடன் ஊர் நிலவரங்கள் பற்றி நீண்ட நேரம் உரையாடினேன். எங்கள் வீட்டு முற்றத்தில் நல்ல காற்று வீசும். அதிலேதான் வழமையாக நாங்கள் அமர்ந்திருப்பதுண்டு. அதிலிருந்து என் சகோதரர்களோடு பேசிக்கொண்டு இருப்பதில் ஒரு நிம்மதி கிடைக்கும். அதனை இம்முறை நான் அதிகம் பயன்படுத்தினேன்.



இந்த நாள் யாழ்ப்பாண திருமறைக் கலா மன்றத்தின் முக்கிய உறுப்பினர்களுடனான சந்திப்பு. மன்றத்தின் எதிர்காலம் பற்றிய ஆழமான விடயங்களை பகிர்ந்து கொண்டோம். மன்றத்தின் ஸ்தாபகரும் இயக்குனருமான அருட்தந்தை நீ.மரியசேவியர் அடிகளாரின் மறைவுக்கு பின்னர் முதல் தடவையாக யாழ் மன்றத்தில் நான் மன்ற நிர்வாகத்தினரை சந்திக்கிறேன். கலை வழியாக அற்புதமான பணிகளை ஆற்றி, ஏராளமான இளையோரை மிக நீண்ட காலமாக கட்டுப்பாட்டுள் வைத்துள்ளார்கள். இதற்காக அடிகளாரிடம் பயிற்சி பெற்ற பலர் நிர்வாகக் குழுவில் பொறுப்போடு இயங்கி வருகிறார்கள். அருட்தந்தை ஸ்டீபன் அன்ரனி, அருட்தந்தை ஜெயசேகரம் அடிகளார்களின் ஆலோசனைகளின்படி மன்றம் தற்போது இயங்கி வருகிறது.

நோர்வேயின் மன்றக்கிளைப் பொறுப்பாளர் என்ற முறையில் நானும் அவர்களுள் ஒருவன். அருட்தந்தை நீ.மரியசேவியர் அடிகளாரின் பிள்ளைகளில் நானும் ஒருவன் என்ற பெருமை எனக்குள் உண்டு. எனவே இச்சந்திப்பு எனது பயணத் திருப்தியினை கொடுத்தது. சந்திப்பின் நிறைவில் அருட்தந்தை ஸ்டீபன் அன்ரனி யாழ் மறை அலை கலைக்கூடத்தினை பார்வையிடும்படி என்னை அழைத்தார். மன்றத்தின் பிரதி இயக்குனர் யோண்சன் ராஜ்குமார், கலைமுக ஆசிரியர் எமில் போன்றோருடன் சென்று கலைக்கூடத்தினைப் பார்த்தேன். சிறந்த தொழில்நுட்ப கருவிகள் அடங்கிய அழகான கலைக்கூடம். அருட்தந்தை ஸ்ரீபன் அன்ரனியின் பொறுப்பில் மறை அலை தொலைக்காட்சி சேவை இயங்குகிறது. கத்தோலிக்க மறை செய்திகள், கருத்துக்களம், சமுக குடும்ப நலன்களை பேணவல்ல சிறந்த நிகழ்ச்சிகளை இந்த ஊடகம் ஒளிபரப்பி வருகிறது. குறிப்பாக கருத்துக்களம் நிகழ்ச்சி தத்துவவியல், இறையியல் போன்ற கல்வித்துறைகளில் தேர்ச்சிபெற்ற சிறந்த கத்தோலிக்க குருக்களை நேர்காணல் காண்பதன் மூலம் சிறந்த பயனுள்ள கருத்துக்களை கொடுத்து வருகிறார்கள். அதே நிகழ்ச்சியில் என்னையும் நேர்காணல் ஒன்றினை தரும்படி அருட்தந்தை பணித்தார். தலைப்பு "நோர்வேவாழ் புலம்பெயர் தமிழர்களின் ஆன்மிகம்". தமிழிலும், மறையிலும் ஆளுமையுள்ள திரு. அலெக்ஸ் அமலரட்ணம் அவர்களே என்னை நேர்கண்டார். கொடுக்கப்பட்ட நேரத்துள் முக்கிய கருத்துக்களை கொடுக்கவேண்டி இருந்தது. நோர்வே வாழ் எமது மக்களின் சிறப்புக்களை பகிர்ந்த ஓர் திருப்தியினை கொடுத்தது.

இவ்வாறு எனது பயண நாட்கள் இனிமையாகவே கழிந்தன. மீண்டும் நோர்வேக்கு பயணிக்க வேண்டிய நாள் நெருங்கியது. நோர்வேயில் இன்னும் பல பணிகளைத் தொடர வேண்டும். இதயம் கனக்க விமானத்தை பிடித்துக்கொண்டு நோர்வே வந்து சேர்ந்தேன்.

படங்கள்: யூலியஸ் அன்ரனி

# தாவீதுத்திறவு

-தமயந்தி.



தொடர்- பாகம் 2

“ஐயா, நீங்கள் கிளாலியில உமையாள்தேவி எண்டு ஒரு கூத்துப் போட்டதாகச் சொன்னீங்கள்..., நாங்களும் கேள்விப் பட்டனாங்கள். அதொரு பெண்போராளியப் பற்றின கூத்துத்தானேயையா?”

“ஓமப்பன் அது வந்து.... இந்தக் கடல்ல வந்துகிடந்து கண்டமேனிக்குக் குண்டுகள் போட்டுச் சனங்களச் சாகடிச்சுக்கொண்டிருந்த சண்டக்கப்பலொண்ட நம்ம சொந்தக்காரப்புள்ள தற்கொலப் போராளியாப்போய் வெடிக்கவச்சுத் தானுஞ் செத்துப்போனாள். அந்த உண்மக்கததான் உமையாள்தேவி எண்ட கூத்து”

“அதிலயிருந்தொரு பாட்டுப் பாட ஏலுமா ஐயா?”

“ம்...... ம்...... இது ஒரு உருக்கமான பாட்டு ராசா..., அண்டைக்குக் கூத்துப் பாத்த எல்லாச் சனத்தயும் தேம்பவச்ச பாட்டு. உமையாள்தேவி கடல்ல வெடிச்சுச் செத்துப்போனாள். பிரேதங் கைக்குக் கிடைக்கையில்ல, அவளின்ர படங்கள வாகனங்களில கட்டி ஊரெல்லாம் ஊர்வலம் வச்சுக் கொண்டாடிக் கொண்டிருக்க, தாய்க்காறி போய்க் கடக்கரயில தனியனா நிண்டு புலம்பியழுகிற பாட்டு அது. என்ர பேத்திமுறயான பிள்ளயொருத்திதான் தாய்க்காறிக்கு நடிச்சவள். சனமெல்லாத்தயுங் கதறவச்சுப்போட்டாள் புள்ள. அவளும் பிறகிட்டு இந்த வன்னிக்க அம்பிட்டு..... இண்டுவரயும் எங்க ஏதண்டில்ல”

சொல்லிக்கொண்டிருந்த தாவீதுத்திறவு அண்ணாவியார் துயர் கவிந்தவராக தலை கவிழ்ந்து நிலத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். சிறிது நேரம் அந்த இடத்தை அமைதி ஆட்கொண்டிருந்தது. அதனை அண்ணாவியாரே கலைத்தார்.

“ஓம் தம்பி.... அந்தப் பாட்டு...?”
“ஓமையா பாடுங்கோ”

“அல்லிமுக வடிவழகே- எந்தன்
ஆரமுதே தேன்சுவையே
இல்லையென்று இருப்பேனோ- அள்ளி
ஈன்ற கையால் கொடுப்பேனோ
உலையிலிட்ட மெழுகாக- உயிர்
உருகுதடி உமையாளே
உண்ண மனம் ஒப்பாமல்- உளம்
உலையுதடி மகளாரே
ஊருலகம் தானுறங்க- நீயும்
ஊர்வலமாய்ப் போயினையோ
ஊமையெனக் கரை நீளம்- நானும்
ஊசலாகிக் கரைவேனோ
எங்கென நான் தேடுவேனோ- எந்தன்
எண்டிசை சூள் சூரியனே

*எல்லை எட்டும் ஓடுகிறேன்- கடல்*
*எல்லாம் சென்று தேடுகிறேன்*
*ஏனடியென் மாமலரே- எனை*
*ஏதிலியாய் வேக விட்டாய்*
*ஏதாவதோர் திசையிருந்தே- குரல்*
*ஏவிவிட தான் மறந்தாய்”*

*பாடி முடித்த பின்புதான் அவதானித்தேன் அண்ணாவியாரின் இருவிழிகளும் கசிந்திருப்பதை. நான் அவரைப் பார்த்ததும் தனது தலையைக் கவிழ்ந்துகொண்டார். என்ன சொல்லவது, மேற்கொண்டு என்ன செய்வது என்று எதுவுமே புலப்படவில்லை எனக்கு. மீண்டும் அந்த அண்ணாவியார் வீட்டு வேப்பமரத் திடலை அமைதி ஆக்கிரமித்துக் கொண்டது.*

*வீட்டுக்குள்ளிருந்து வெளிப்பட்ட மகிறம்மாஆச்சி சட்டகம் போட்ட இரண்டு புகைப்படங்களைக் கொண்டுவந்தார். ஒரு படத்தில் ஒரு இளம் போராளிப் பெண் கறுப்புச் சீருடையோடிருந்தாள். இன்னொரு படத்தில் ஒரு இளம் பெண் சிரித்தபடி அழகாகக் காணப்பட்டாள். மகிறம்மா ஆச்சி இரண்டு படங்களையும் எனது கையில் தந்துவிட்டு விளங்கப் படுத்தத் தொடங்கினார்.*

*“இதுதான் தம்பி உமையாள்தேவி எண்ட போராளி. பீரங்கிக்கப்பல வெடிக்கவச்சுத் தானும் செத்துப்போன பிள்ள. மற்றப் படத்தில இருக்கிறவள் தம்பி எங்களுக்குப் பேத்திமுறயானவள். அந்தக் கூத்தில தாய்க்காறிக்கு நடிச்சவள். வன்னியில இருந்தவள். இப்ப எவ்விடம், ஏதிடமெண்டில்ல. ரெண்டு குமர்ப்பிள்ளயள் தகப்பனோடதான் இருக்கிறாளவய. புருசன் காரன் மருசல். அவர இப்ப நீங்க காணலாம், சத்துநேரத்தில வருவார்”*

*இதற்கெல்லாம் நான் என்ன சொல்வது, அல்லது எதைக் கேட்பது? அல்லது என்னிடமிருந்து எப்படியான வார்த்தைகளை, கேள்விகளை இவர்கள் எதிர் பார்க்கிறார்கள். அல்லது எவ்விதக் கேள்வி நியாயங்களையும் என்னிடமிருந்து எதிர்பார்க்கவேண்டிய தேவை இவர்களுக்கு இருக்க வாய்ப்பில்லையா? புரியாமல்த் தவித்தேன். இரண்டு படங்களையும் மகிறம்மாச்சியிடம் கொடுத்தேன். மகிறம்மாச்சி படங்களோடு வீட்டுக்குள் போனாள்.*

*“ஐயா, உங்கட தாவீது எண்ட பேரோட இருக்கிற அந்த திறவு எண்டது ஏதாவது காரணப் பேரா ஐயா?”*

*“அதொரு பெரிய கதை தம்பி. பொறுமயாக் கேள்ப்பீராயிருந்தாச் சொல்லுவன்”*

*“சொல்லுங்கையா” பலகை நாற்காலியில் இதுவரை சாய்ந்திருந்தபடி கதை சொல்லிக் கொண்டிருந்த அண்ணாவி தாவீதுத்திறவு நிமிர்ந்து நாற்காலி நுனிக்கு வந்தார்.*

*“அப்பேக்க.... எனக்குப் பத்து வயசு நடந்துகொண்டிருக்கு ராசா. நான் முதல்ல சொன்னன்தானே பிசப்பாண்டவர் அல்பிரேட்டுக் குயோமர், அவர் எங்கட அண்ணாவியயுங் கூட்டிக்கொண்டு மலேயாவுக்குப் போனவர். எதுக்கெண்டால் அந்த வருசம் மலேயாவில தமிழ்ப் பிள்ளயளுக்கெண்டொரு பள்ளிக்குடம் கட்டித் திறந்தவயள். அது வந்து பிலோமினாதமிழ்ப்பள்ளி ராசா. அதுக்குப் போய் காப்புவிருத்தம் பாடினவர் எங்கட அண்ணாவியார். அப்ப அங்கயிருந்த பெருந்தலக்கட்டு சொக்கலிங்கச் செட்டியார். அவர் அண்ணாவியாரக் கூப்பிட்டு விருந்து வச்சவர். விருந்து முடிஞ்ச மறுநாள் சொக்கலிங்கஞ்செட்டி அங்கயிருந்த நாகம்மாள் கோயிலுக்கும் கூட்டிக்கொண்டு போய், நாகம்மாள் பேரிலயும் ஒரு பாட்டுக் கட்டித் தரச்சொல்லிக் கேட்டிருக்கிறார். அண்ணாவியார் நம்மட நயினாதீவு நாகம்மாளின்ர பேரில எழுதின நாகம்மாள் காப்பு விருத்தங்கள மூச்சு விடாமல்ப் பாடியிருக்கிறேர். அப்பிடியே செட்டியார் மயங்கமடிச்சுப்போய் விழுந்திட்டாராம். அண்ணாவியார வீட்டுக்குக் கூட்டிக்கொண்டுபோய் என்ன வேணும் கேளும் எண்டு செட்டியார் கேட்டிருக்கிறார்”*

*தொடரும்.....*

Norwegian Organization for Rehabilitation of Differently Abled

## Frivillig prosjekt i Sri Lanka



# NORDA

NORDA என்பது இலங்கையில் மாற்றுத் திறனாளிகளின் வாழ்வை மேம்படுத்த பணிபுரியும் நிறுவனங்களுக்கு தொழில்முறை மற்றும் நிதி உதவி வழங்குவதை நோக்கமாகக் கொண்ட ஒரு அங்கத்துவ அமைப்பாகும்.

VAROD: வன்னி மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு அமைப்பு (VAROD) in Kilinochchi) Mullaitivu and vavunya). இது 2009 இல் நிறுவப்பட்ட ஒரு அரச சார்பற்ற, இலாப நோக்கற்ற அமைப்பாகும். யுத்தம் நடைபெற்ற காலத்திலும், அதன் பின்னரும் ஏராளமான மக்கள் தமது அவயவங்களை இழந்து உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களது வாழ்நிலையினை சீரமைப்பதற்காக இயங்கி வருகிறது.

VAROD என்பது KAROD (கிளிநொச்சி மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வு சங்கம்) எனப்படும் சமூக அடிப்படையிலான புனர்வாழ்வு (CBR) திட்டத்தின் தொடர்ச்சியாகும், இது 1990ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போர் முடியும் வரை கிளிநொச்சி பகுதியில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை செய்து வந்தது.

VAROD,போரில் ஏற்பட்ட காயங்கள் மற்றும் பிற இயற்கை காரணங்களால் ஊனமுற்றவர்களுக்கு உடல், உளவியல் மற்றும் சமூக-பொருளாதார பராமரிப்பு உதவிகளை வழங்குகிறது.
இந்த தொண்டு நிறுவனம் ஏராளமான மாற்றுத்திறனாளிகளுக்கு உதவ வேண்டிய மிகப்பெரும் கட்டாயத்தியிலுள்ளது.
ஆர்வமுடையோர் தொடர்புகொள்ளுங்கள்.
மாற்றுத் திறனாளிகளின் மறுவாழ்வுக்கான அமைப்பு
Dr. Joseph Soosai : soosai@online.no tel 93822539
Lene Bækken: lenebaekken@mail.com tel 95491194
Vanni Rehabilitation – Vanni Rehabilitation Organization for the Diffrently Abled (disablesvanni.org)

**B.NORDA`s s actvities**

| | | |
|---|---|---|
| Sponsor a child | Program was initiated in 2002 and now with the support of 30 sponsor families in Norway. Regular annual gathering for the SPC sponsors and NORDA members in Oslo. | Sponsor amount 250 NOK per month |
| Fundraising for rehabilitation/physiotherapy team in Kilinochchi and Mulatitivu | | Target amount 150,000 NOK per year |
| Facilitating sponsor a family | For livelihood support through CBR -CRC groups . | 2500-5000 NOK per family |
| | There are 6000 families with PWD, organised into 320 CRC groups | |
| Facilitating sponsor a day meal | For the VAROD centres boys and girls in Vavuniya for a total number of 100 persons. Sponsors are also encouraged to have direct contact with VAROD on the occasions celebrating special moments or commemorate the life of a loved one . | 3000-5000 NOK |
| Voluntary skill and professional support | Encouraging voluntary workers high school students and professionals to visit VAROD and other partners | |

NORDA membership : Individual 200 NOK per year, Family 100 NOK per month

(Joseph Ratnarajah Sponsor a child coordinator: vratna@gmail.com tel 900 868 41)

Kontonummer: 5081.08.78638 eller

VIPPS NR: 71448

Vennlig hilsen
Styret

NORDA,C/o Joseph Soosai ,Lørenveien 48 A, 0585 Oslo ,Org. nr. 989 773 208

# இலங்கையில் பெண் தலைமைக் குடும்பங்களின் வாழ்வியல்

பாகம்-10

**-ப்ரியமதா பயஸ்-**

மனம் மிக நொருங்கிய வேளையிலும், மனம் கனத்த வேளையிலும் எப்போதுமே எல்லோருக்கும் ஆறுதல் அவரவர் வணங்கும் தெய்வங்கள் அன்றி வேறு ஒன்றும் இல்லைத்தான்.

அன்றும் காலையில் எனக்கான அவசரத்துடன் தோட்டவெளியில் உள்ள அந்த சிறிய வைரவர் ஆலயத்தை கடக்கிறேன். வெங்காயம் கிண்டும் சின்ன கைப்பாரை ஒன்று, ஒரு துவாய், ஒரு லீற்றர் போத்தல் ஒன்றில் நிறைய தண்ணீர், ஒருசோடி தேய்ந்த செருப்பு, அழுக்கேறிய ஆடை வெறுமையான நெற்றி, செம்பாட்டு மண் உறைந்த பாதங்கள், செம்படை வற்றிய கூந்தல், ஒளியிழந்த கண்கள் அந்த சிறிய கோவிலுக்குள் ஒரு அடி கூட உயரம் இல்லாத அந்த இரும்பால் செய்த வைரவர் சூலத்தை நேருக்கு நேர் நின்று கரங்களை கூப்பி கேவிக்கேவி அழுத அந்த இளம் பெண்ணைச் சாதாரணமாக என்னால் கடந்து போய்விட முடியவில்லை.

அவள் அழுது தீர்க்கட்டும் என அந்த வேலியோர வேப்ப மரத்தடியில் இருந்துவிட்டேன் அரைமணி நேரம் வரை அவள் அழுதாள், பின்னர் என்ன நினைத்தாளோ அவசர அவசரமாக தன்னுடைய பொருட்களை எடுத்துக்கொண்டு விரைந்து நடந்து வந்தாள். நான் மரநிழலில் இருந்ததுகூட அவளுக்கு புலப்படவில்லை. விறுக்கு விறுக்கு என்று தோட்ட வரம்பில் இருக்கிறாள்.

"அக்கா... அக்கா எங்கயக்கா அவசரமாக ஓடுறீங்க நில்லுங்க நானும் வாறேன்"
"மகேந்திரத்துக்கு வெங்காயம் கிளறப்போறீங்களா?"
"நானும் அங்கதான் போறேன் நில்லுங்கோ வாறன்" என்று நான் மூச்சு விடாமல் கூறிமுடித்தேன். சட்டென நின்றவர் என்னை யார் என்று தெரியாமல் முழித்தார்.
"யார் நீங்க உங்களை நான் இங்காலிப்பக்கம் ஒருநாளும் காணவில்லையே" என்கிறார்.
"ஓம் ஓம் நான் இப்பதான் இங்கால குடியிருக்க வந்திருக்கிறான் மகேந்திரம் வீட்டுக்கு பின்னுக்குத்தான். நேற்று சொன்னவர் வெங்காயம் கிண்ட வரச்சொல்லி அதுதான் வந்தனான்" என்றேன்.

"மகேந்திரத்தாரிண்ட தோட்டத்தில் இப்போ 10 வருசமா நான்தான் எல்லாம் செய்யிறனான் அதுதான் உங்களை ஒருநாளும் கண்டதில்லை" என்றார்.
"சரி வாங்கோ கதைச்சுக் கதைச்சுப் போவோம்" என என்னை அழைத்தார். சரி என்று இருவரும் பேசிக்கொண்டே அன்று வெங்காயம், கிண்டினோம். அப்போதுதான் அந்த வைரவரிடம் சொல்லி அழுதவிடயம் எனக்கு தெரியவருகிறது.



படம்: ப்ரியமதா பயஸ்

பத்மா 10 வருடங்களுக்கு முன் கணவனை இழந்த மூன்று பிள்ளைகளின் தாய். புகையிலைக்கு தண்ணி கட்டி விட்டு இரவு பத்துமணிக்கு வீடு திரும்பும்போது பாம்பு தீண்டியதில் அவளது 35 வயது இளம் கணவன் உயிரிழக்கிறான். அவளுக்கு அப்போது 29 வயது. நண்டும் குஞ்சும் போன்று சின்ன குழந்தைகளுடன் இருந்த அவளது வாழ்வு சின்னாபின்னமாகிறது. தோட்டவேலை மட்டும் தெரிந்த கணவன், படிப்பறிவு இல்லாத அம்மா அப்பா என எந்த தொழிலும் அறியாத அவள் நடுத்தெருவுக்கு வருகிறாள். அதற்குப் பின்னர் அவளின் வாழ்வியல் பற்றி அவள் ஒவ்வொன்றாக கூறும்போ வைரவரிடம் அவள் அலுத்து புலம்பியதன் நியாயம் எனக்கு புரிந்தது.

கிட்டதட்ட பத்து வருடங்களை அவள் கடந்துவந்தது இனி உள்ள வருடங்களை அவள் கடக்க இருப்பது பிள்ளைகளின் எதிர்காலம் என ஒவ்வொன்றாக பேசி முடிக்கையில் ஒரு விதவைப் பெண் தலைமை குடும்பமாக வாழ்வில் படும் அவலங்கள் இன்னொரு கோணத்தில் எனக்கு புலப்பட்டது. நானும் அவள்போல் விதவையாக பெண் தலை-மைக் குடும்பமாக கண்ட அவலங்களின் அவள் இன்னொரு மடங்கு கூடுதலாகவே தன் வாழ்வில் சுமக்கிறாள் என்பது இன்னும் நெருடலாகவே இருந்தது. தனியே ஒருத்தியாக தோட்டவேலையை மட்டும் செய்து மூன்று பிள்ளைகளைப் படிக்க வைத்து, அவர்களுக்கு உணவு கொடுத்து, உடைகொடுத்து வளர்த்து எடுத்தல் என்பது இலகு இல்லை. வாழ்க்கையில் இருக்கும் மிகக் கொடிய காலம் அதுவாகவே இருக்கும். பலமுறை தற்கொலை செய்துகொள்ளலாம் என தான் நினைத்தும், அந்த மூன்று பிள்ளைகளையும் வளர்ப்பது உனக்கு அவ்வளவு கஸ்ட்மா? அதுதானா சாகிறாய் என தன் மனசாட்சி தன்னிடம் பலமுறை நெருடியதாக கண்ணீருடன் சொல்கிறார் பத்மா?

*பல நாள் காலையில் பிள்ளைகளுக்கு சாப்பாடு இல்லை என்றால் வாழை பொத்தியை முறித்துக் கொண்டுவந்து வெட்டி, முதல்நாளில் தோட்டகாரர் தந்த மரவள்ளி கிழங்கில் ஒருதுண்டை வெட்டி இரண்டையும் சேர்த்து அவித்து பிள்ளைகளுக்கு ரொட்டிபோல் சுட்டு கொடுப்பேன். அவ்வப்போது கிடைக்கும் மரக்கறிகள், கீரைகள்தான் என் வீட்டில் வழமையான சாப்பாடு. வளரும் பிள்ளைகளுக்கு மீன் இறைச்சி என்று நான் வாங்கி சமைத்து கொடுக்க முடியமால் இருக்கிறேன். மூத்தவளுக்கு இரத்த சோகை என்று டொக்டர் சொன்னவர் அதுக்கு குடுக்க சொன்ன சாப்பாடுகளை நான் இதுவரை கண்ணாலே கண்டதே இல்லை எப்படி என் பிள்ளைகளுக்கு கொடுப்பேன் என கையை விரிக்கிறாள்.*

*அவர் இருக்கும்போது ஒவ்வொரு நாளும் வேலையால் வரும்போது அடுத்த நாளுக்கும் அன்றைக்கும் போதிய சாப்பாட்டுச் சாமான் வாங்கிக் கொண்டுதான் வருவார். பிள்ளைகளுக்கு நல்லசாப்பாடு கொடுக்கவேண்டும் அதுக்குத்தான் நான் இப்பிடி கஷ்டப்பட்டு மண்ணுக்குள்ளே கிடந்து குளிக்கிறேன் என்று சொல்லி சாப்பாட்டில் அவர் மிக கவனம், எந்த கெட்ட பழக்கமும் அவருக்கு இல்லை வெற்றிலை கூட போடமாட்டார். எல்லாம் பிள்ளைகளுக்கு தான். ஆனால் நான் இப்போது பிள்ளைகளுக்கு ஒருநேரம் சாப்பாடு போடவே இவ்வளவு சாகிறேன் என்று கண்ணீர் விட்டாள்.*

*இலங்கையில் பெண் தலைமை குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்தை ஏற்படுத்துவதில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் இன்னமும் கரிசனை காட்ட வேண்டும் என்பதை புரிய முடிகிறது. எல்லோருக்கும் சுயதொழில் என்பது இலகுவில் கைகூடி விடாது. அது ஒரு பயிற்சியும் பட்டறிவும் நிறைந்த தொழிலாக மாற சிலருக்கு காலம் எடுக்கும், சிலருக்கு அமையாமல் போய்விடும், கல்வி அறிவு என்பது சிலவேளைகளில் சுயதொழிலுக்கும் கைகொடுக்ககூடியது. இவற்றை உதவி வழங்குபவர்கள் உணர வேண்டும்.*

*பத்மா போன்று வெளியே வரமுடியாத பலஆயிரம் பெண்தலைமை குடும்பங்களும் பெண்களும் பல சமூக நடைமுறைகளைத் தகர்க்க முடியாமலும் ஜீரணிக்க முடியாமலும் அல்லாடுவதை கண்டுகொள்வார் யாரும் இல்லை என்பது இங்கே கண்கூடு.*

*கோழிக்கூடும் 20 கோழிக் குஞ்சுகளையும் வழங்கிய நிறுவனம் ஒன்று 20முறை தன்னை புகைப்படம் எடுத்துவிட்டது என்றும் தன் பிள்ளைகள் அம்மா உங்களுக்கு இது வேண்டாம் நாங்களும் உங்களோடு தோட்டவேலைக்கு வருகிறோம் என அழுத கதையையும் பத்மா என்னிடம் கூறுகிறார். ஒருமுறை மிளகாய்க் கண்டு சாறிக்கொண்டு நிற்கும் போதும் என்னைக் கூப்பிட்டு போட்டோ எடுத்தார்கள். நான் பொய் என்றால் இங்க மகேந்திரம் அண்ணையை கேளுங்கோ என்று ஆதங்க படுகிறார் பத்மா. பின்னர்தான் தான் அறிந்து கொண்டதாம் அந்த உதவியை பெற்று வழங்குபவர் தன்னை வைத்தே இருபதுபேரிடம் காசுவாங்கி தானே எடுத்து இருக்கிறார் என்பதை என்று பத்மா கோபப் படுகிறார்.*

*உதவி வழங்கிவிட்டு புகைப்படம் எடுத்தால் தவறு இல்லைதான் ஆனால் இப்படி ஒருவரின் புகைப்படத்தையே எல்லோருக்கும் அனுப்பி காசு கொள்ளை அடிப்பது எவ்வளவு கீழ்த்தனமான செயல் என்பதை பாருங்கள்.*

*இப்படி இலங்கையில் பெண் தலைமை குடும்பங்களின் வாழ்வியல் நிலைமை மிக மோசமாகவே உள்ளது இன்னும் இருக்கு அடுத்த இதழில் தொடர்கிறேன்.*

*தொடரும்....*

# இறுதியாக பேசவிடுங்கள்!

-தமயந்தி-

வெப்பல் கவிந்த இரவுகளில்
நிலவொளியின் கீழ்
தோணியில் மிதந்தபடி
கடலாளிடம் கதை கதையாக
கேட்டு வளர்ந்தவன் கேட்கிறேன்
இறுதியாக என்னை
ஒருதடவையேனும்
அவளோடு பேச விடுங்கள்.

கடல் பேசுமா?
நீங்கள் கேட்பது கேட்கிறது.
பேசும்.
பேசுவாள்.

பாடுவாள் கவிர் ஆடுவாள்,
பூங்கறை சிதறச் சிரித்திடுவாள்.
அழுவாள் கரைகடந்து
சிறு உமிரி வாழவென்று.
கூடுவாள் மடியமர்த்தி
பசியாற மார்திறப்பாள்,
தேடுவாள் கருமுகிலை
தேசமெல்லாம் நாவூற.

எழுவான் தொடக்கம்
படுவான் கரையெங்கும்
கூடிக் கொட்டி கூத்தாடுவாள்.
அனலை மடத்தடியின்
ஆலம்பழம் பறித்து
தீவுக்கரைகளெலாம்
தீயெறியும் சூரியனை
மறைத்துக் குடை விதைப்பாள்

ஆடறுத்து பங்கு போட்டாற்போல்
அவளை கூறுபோட்ட உங்கள்
ஏழேழு தலைமுறைக்கும்
சேர்த்து வைத்த
பாவப்பொட்டளிகள்
அழுகியொழிகி
எழுந்து சன்னதம் ஆடுவதற்குமுன்
இறுதியாகப் பேச விடுங்கள்.

கடல் அமைதியாக இருப்பதாக
நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்
அவள் கரையை அவதானித்தபடி
உள்ளே குமுறிக்கொண்டிருக்கிறாள்.

காயங்களின் பாவச்சிலுவைகளை
உங்கள் வம்சபரியந்தம்
சுமக்காதிருக்கும்படியாக
வேண்டிக் கொள்ளவேனும்
அவளோடு என்னைப்
பேச விடுங்கள்.
உங்கள்,
உங்களது சந்ததிக்காக

மாங்காய்த்தேசத்தை
மடியில் சுமப்பவளை
சிதறுதேங்காயென அடிக்கும்
மைந்தர்கள் நாம் வெறும்
மாங்காய் மடையரே.






*மாலியால் சுவரில் கிறுக்கப்பட்ட அந்த ஓவியத்திலிருந்து*
*பெயர் தெரியாத விலங்கொன்று*
*கீழுறங்கி வருகிறது.*
*மகள் அழத்தொடங்குகிறாள்*
*ஓடோடிப் போய் ஓவியத்தை அழித்துவிடுகிறேன்.*
*மீதமாகிய கிறுக்கலிலிருந்து*
*ராட்சச பறவையொன்று பறக்கத்தயாராகிறது.*
*மகள் ஆச்சரியமாக பார்த்து மகிழ்கிறாள்.*
*உடனே பறவையை பறக்கவிடாமலிருக்க நான்*
*சில மீன்களை சுவரில் வரைகிறேன்*
*மகள் பறவையை மறந்து மீன்களில்*
*திகைத்து நிற்கிறாள்.*
*பறவையோ ஒவ்வொன்றாக மீன்களை சாப்பிடத் தொடங்குகிறது*
*இப்போது மகள் மீன்களை நிறைய நிறைய வரையச் சொல்லி*
*கேட்கிறாள்.*
*நானும் வரைந்து கொண்டேயிருக்கிறேன்.*
*ராட்சச பறவை சாப்பிட்டுக்கொண்டே வருகிறது.*
*மகள் மீன்களை பாவம் என்கிறாள்*
*அதனால் கடலொன்றை வரைந்து முடிக்கிறேன்*
*பறவை பசி தீர்க்கிறது*
*மகளுக்கோ பசியெடுக்கிறது*
*அப்பிள் கேட்டு அழுகிறாள்*
*நான் இப்போது கிறுக்குவதை விட்டுவிட்டு*
*அப்பிள் ஒன்றை வாங்கவென*
*நகர்கிறேன்.*
*மகள் நான் வருவதற்குள் சுவரிலுள்ள கிறுக்கல்களை அழித்துவிட்டு*
*அப்பிள் ஒன்றை வரைந்து கொண்டிருக்கிறாள்*
*அருகில் சென்று மகள் என்கிறேன்*
*கையில் அப்பிளுடன்.*
*மகள்*
*தான் வரைந்த அப்பிளுக்கு*
*ஊதா நிறத்தை தீட்டியிருந்தாள்.*







Det var engang, for ikke så veldig lenge siden, en gris, en and, en katt og en liten rød høne som bodde sammen i et koselig lite hus.
Hver dag, og hele dagen lang ville grisen bare velte seg i den gjørmete sølepytten sin. Anda ville bare svømme i andedammen, og katten ville bare sitte i sola og vaske seg med den lyserøde tungen sin. Den lille røde høna måtte gjøre alt arbeidet i huset.
En dag hun trippet og vippet omkring ute på tunet og lette etter en feit meitemark til middag, kom hun over et hvetekorn. Da fikk hun en idé.

Hvem vil plante dette hvetekornet? ropte hun. Ikke jeg, gryntet grisen fra sølepytten sin. Ikke jeg, kvekket anda fra andedammen. Ikke jeg, malte katten, og kvalte en diger gjesp. Da gjør jeg det, sa den lille røde høna. Og så gjorde hun det.
Hvetekornet begynte å spire, og vokste og vokste til det var høyt og gyllent og modent.
Hvem vil skjære hveten? ropte den lille røde høna. Ikke jeg, gryntet grisen fra sølepytten sin. Ikke jeg, kvekket anda fra andedammen. Ikke jeg, malte katten, og vasket seg med tunga. Da gjør jeg det, sa den lille røde høna. Og så gjorde hun det.
Snart var hveten ferdig til å males til mel.

Hvem vil bære hveten til mølla? ropte den lille røde høna. Ikke jeg, gryntet grisen fra sølepytten sin. Ikke jeg, kvekket anda fra andedammen. Ikke jeg, malte katten og snudde dovent på hodet. Nei vel, da gjør jeg det, sa den lille røde høna. Og så gjorde hun det.
Da hveten kom tilbake fra mølla, var det en liten sekk med fint hvetemel.
Hvem vil bake brød av melet? ropte den lille røde høna. Ikke jeg, gryntet grisen fra sølepytten sin. Ikke jeg, kvekket anda fra andedammen. Ikke jeg, malte katten, og strøk seg over bartene. Da gjør jeg det, sa den lille røde høna. Og så gjorde hun det.
Snart kunne den lille røde høna ta det herligste, sprøeste hvetebrød ut av ovnen.
Og så ropte hun: Hvem vil spise hvetebrødet jeg har laget? Det vil jeg, gryntet grisen, og veltet seg opp av sølepytten. Det vil jeg, kvekket anda, og padlet ut av andedammen. Det vil jeg, malte katten, og tok en siste slikk på potene sine.

Å nei, det vil dere ikke, sa den lille røde høna. Jeg fant hvetekornet. Jeg plantet det. Jeg høstet det modne kornet. Jeg bar det til mølla. Jeg bakte brødet. Og nå vil jeg jammen spise det også.
Og en-to-tre, så gjorde hun det.




Man da høna hadde spist seg god og mett, var det enda mye brød igjen.
Da hørte hun plutselig noen triste lyder: «Mjauuuu, - Kvaaakk … gryyynt…»
Det var katten, anden og grisen som satt utenfor og klagde sin nød. Nå var de så sultne og alle skjønte at de burde ha hjulpet vennen sin med å lage brødet.

Høna var stappmett, og sa til seg selv; Brød har jeg, men triste venner, det vil jeg ikke ha.
Så høna tok brødet under vingen sin, gikk bort til vennene sine og sa: Jeg vil dele brødet med dere likevel, men neste gang jeg finner et korn, må alle hjelpe til!
JAAA! ropte alle dyrene i kor, «Vi lover!»
Så spiste de brødet og alle ble gode og mette. Og neste gang det dukket opp et korn på gården, var alle med og hjalp hverandre.



முன்னொரு காலத்தில் ஒரு சிறிய வீட்டில் ஒரு பன்றி, ஒரு வாத்து, ஒரு பூனை மற்றும் ஒரு சிறிய சிவப்பு கோழி ஆகியன ஒன்றாக வாழ்ந்து வந்தன.
நாள் முழுவதும், பன்றி தனது சேற்று குட்டையில் புரள விரும்பியது. வாத்து குளத்தில் நீந்த விரும்பியது, பூனை வெயிலில் உட்கார்ந்து தனது இளஞ்சிவப்பு நாக்கால் தன்னையே கழுவ விரும்பியது. குட்டி சிவப்புக் கோழி மட்டுமே வீட்டில் எல்லா வேலைகளையும் செய்ய வேண்டியிருந்தது. கோழி தன் நண்பர்களிடம் ஒரு தானியம் நடுவதற்கு, அதனை தண்ணீர் ஊற்றி வளர்க்க மற்றும் பல உதவிகளைக் கேட்டது, ஆனால் அவர்கள் உதவுவதில் ஆர்வம் காட்டவில்லை.

ஒரு நாள் இந்த சிவப்புக் கோழி ஒரு கோதுமைத் தானியத்தை நட்டு அதற்கு தண்ணீர் ஊற்றி பாதுகாத்து அறுவடை செய்து மாவாக்கி, அதிலிருந்து ஒரு பாண் செய்தது. அது தன் நண்பர்களாகிய பூனை, பன்றி, வாத்து ஆகியோரிடம் பல முறை உதவி கேட்டும் அவர்களின் சோம்பேறித்தனத்தால் அவர்கள் உதவி செய்ய மறுப்பதால், தனியாகவே எப்போதும் வேலையை செய்தது. இறுதியாக அந்த பாணை சாப்பிடுவதற்கு மட்டும் மிகவும் மகிழ்ச்சியாக நண்பர்கள் வந்தார்கள். அதற்கு அந்த சிறிய கோழி இல்லை எல்லா வேலைகளையும் நான் தனியாகவே செய்தேன் அதனால் இந்த பாணையும் நான் எனது குஞ்சுகளோடு மாத்திரம் பகிர்ந்து உண்டு கொள்ளுகிறேன் என்கிறது. இருந்தாலும் மிஞ்சிய பாணை உங்களுக்கும் தருகிறேன் ஆனால் நீங்கள் அடுத்ததடவை எனக்கு உதவி செய்ய வேண்டும் என்றது. அதன் பின்னர் பகிர்ந்து கொடுத்தது.

இந்தக் கதை நமக்கு பல்வேறு விடயங்களை சொல்கிறதல்லவா. உழைத்தால்தான் உணவு.
எதை நாம் மற்றவர்களுக்கு செய்கிறோமோ அதுவே நமக்கும் கிடைக்கும். எமது சோம்பேறித் தனத்தை விட்டு உழைக்க வேண்டும். உழைத்தால் தான் நாமும் உண்ணலாம். இவ்வாறு பல நல்ல கருத்துக்களை இந்த கதை கூறுகிறது. □

Bergen Tamilsk Avis
Ansvarlig redaktør: Julius Antonipillai - Adresse: Krohnegården 5b, 5146 Fyllingsdalen.- Telefon: 924 636 74
E-Post: ttoosai@gmail.com / antonipillai@hotmail.com Org.nr: 926 840 320 - ISSN 2703-8440